# இறைவன் நமது வானகத் தந்தை

இறைவன் நமது வானகத் தந்தை
இதை உணர்ந்தாலே குளிர்ந்திடும் சிந்தை
குறைகள் தீரும் கவலைகள் மாறும்
குழம்பிய மனதில் அமைதி வந்தேறும்

இறைவன் நமது வானகத் தந்தை

பறவைகள் விதைப்பதும் அறுப்பதும் இல்லை
பத்திரப்படுத்தி வைப்பதுமில்லை
மறந்து விடாமல் அவைகளுக்குணவு (2)
வாரி வழங்கி பேணியே காக்கும்
பேணியே காக்கும்.. பேணியே காக்கும்..

இறைவன் நமது வானகத் தந்தை

எதனை உண்போம் எதனைக் குடிப்போம்
எதனை உடுப்போம் எனத் திகைக்காதே
முதலில் பரமனின் அரசின் நீதியை (2)
முனைந்து தேடிடின் தித்திக்கும் அனைத்தும்
தித்திக்கும் அனைத்தும்.. தித்திக்கும் அனைத்தும் ..

இறைவன் நமது வானகத் தந்தை

வயல்வெளி மலர்களைப் பாரீர் அவைகள்
வருந்தி உழைப்பதும் நூற்பதுமில்லை
மயங்கிட வைக்கும் இவைபோல் சாலமோன் (2)
மன்னனும் என்றும் உடுத்தியதில்லை
உடுத்தியதில்லை.. உடுத்தியதில்லை..

இறைவன் நமது வானகத் தந்தை
இதை உணர்ந்தாலே குளிர்ந்திடும் சிந்தை
குறைகள் தீரும் கவலைகள் மாறும்
குழம்பிய மனதில் அமைதி வந்தேறும்

இறைவன் நமது வானகத் தந்தை